# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 09.07.2010 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஷுஹதாக்களின் வரலாற்றுச் சுருக்கம்தான் இப்போதும் கூறப்படும்.

முதலில் **இஹ்ஸான் அஹ்மத் கான் சாஹிப் ஷஹீது.** இவர் வஸீம் அஹ்மத் சாஹிபுடைய மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமுடைய பாட்டனார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய 313 சஹாபிகளைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். இவர் காங்கா மாவட்டத்தைச் சேர்ந்தவர். இப்போது இலண்டனில் ஜமாஅத்தின் கொள்கை பரப்புநராக இருக்கும் முகர்ரம் ஸஹூர் அஹ்மத் கான் சாஹிப், ஷஹீது மர்ஹூமின் சச்சா ஆவார்கள்.

ஷஹீது மர்ஹூமின் மற்றொரு சகோதரரான நதீம் அஹ்மத் கான் சாஹிப் ஜாமியா அஹ்மதிய்யா ரப்வாவில் படித்துக் கொண்டிருக்கிறார். ஷஹீது மர்ஹூம் 1984-ல் பிறந்தார். இரண்டு வருடங்களாக வேலை பார்த்து வருகிறார். லாஹூர் மாவட்டத்தில் வக்ஃபே ஜதீத் செயலராக சேவை செய்து வந்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 26. மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். சம்பவத்தன்று காலையில் குளித்து விட்டு தொழுதார்; குர்ஆன் ஓதினார். வெளியே புறப்படுவதற்கு முன் மனைவியிடம், இன்று ஜுமுஆவை தாருஸ் ஸிக்ரில் தொழுவேன்; சென்ற குத்பா தொழ முடியாமல் போய் விட்டது என்று கூறினார். பிறகு மகளை எடுத்துக் கொஞ்சி விட்டு புறப்பட்டார். மதியம் 1.35 மணிக்கு தாயாருக்கு போன் செய்து இங்கு தீவிரவாதிகள் வந்துள்ளனர் என்று கூறிவிட்டு ஆறுதல் கூறினார். அதற்குப் பிறகு தொடர்பு கொள்ள முடியவில்லை. அப்போது தீவிரவாதி கிரானைட் வீசினான். அதன் ஓடு பட்டதில் காயமடைந்தார். தீவிரவாதி கொல்லப்பட்டு விட்டதாகவும் வெளியில் வருமாறும் வந்த வதந்தியைக் கேட்டு வெளியில் வந்ததில் கிரானைட்டில் ஒரு துண்டு பட்டு விட்டதில் ஷஹீதாகி விட்டார். ரப்வாவில் அடக்கம் செய்யப்பட்டார். அடங்குவதற்கு முன் இவரது சச்சா ஜனாஸா தொழுகை தமது வீட்டிலும் நடத்தினார். இதில் ஜமாஅத் அல்லாத பலர் பங்கு கொண்டனர். ஷஹீது மர்ஹூமுடைய தாயார் ஷஹாதத்திற்கு ஒரு மாதம் முன்பு கனவில் தமது மகன் ஷஹீதாகி விட்டதாக கண்டார். மகனது ஜனாஸா முற்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. நான் அன்புடன் எனது மகனின் முகத்தை தொடுகிறேன். இப்படி கனவு கண்டதும் பதறி எழுந்தார். என்ன ஆயிற்று? என்று கேட்கப்பட்டது. பின்பு நான் சதகாவும் கொடுத்தேன். ஷஹாதத்திற்குப் பிறகு நான் கனவில் கண்ட அதே இடத்தில் தான் எனது மகனின் உடல் வைக்கப்பட்டது என்று அவரது தாயார் கூறினார். சில நாட்கள் முன்பு ஷஹீது தானும் ஒரு கனவு கண்டார். அதில் பதறி எழுந்தார். ஒரு கெட்ட கனவு கண்டதாக மட்டும் தாயாரிடம் கூறினார். ஸதகாவும் கொடுத்தார். ஷஹீது மர்ஹூம் ஈமான் உள்ளவர். நல்லியல்பு கொண்டவர். அன்புடன் பழகக் கூடியவர். பெற்றோருக்கு கவனத்துடன் தொண்டு செய்வார். இவரது சச்சா என்னிடம் கூறினார். பணி முடித்து வீட்டுக்கு வந்தால் பெற்றோருக்கு சலாம் கூறுவார். பிறகு மனைவி மக்களிடம் வருவார். நான்கு மாத குழந்தை ஒன்று உள்ளது. தினமும் இரவில் தனது தந்தையாரின் கால்களை பிடித்து விட்டு விட்டு தான் தூங்கச் செல்வார். பெற்றோருக்கு கணிசமான தொண்டுகள் செய்துள்ளார். இவருக்கு திருமணமாகி ஒன்றரை வருடம் தான் ஆகிறது. நான்கு மாத குழந்தை வக்ஃபே நவ் திட்டத்தில் இணைந்துள்ளது. அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக!

அடுத்து **முனவ்வர் அஹ்மத் கெய்சர் சாஹிப் ஷஹீது.** மியான் அப்துர் ரஹ்மான் சாஹிபுடைய மகன் ஆவார். இவரது குடும்பம் காதியானில் இருந்தது. பாகிஸ்தான் உருவான பிறகு குஜ்ரானுக்கு மாறினார். அதன் பிறகு லாஹூருக்கு குடிபெயர்ந்தார். இவரது குடும்பத்தில் அப்துல் அசீஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஆவார். ஷஹீது மர்ஹூமின் தந்தைவழிப்பாட்டனார், முகர்ரம் தோஸ்த் முஹம்மது சாஹிபுடைய கஸின் ஆக இருந்தார். இவரது பாட்டனார் மற்றும் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள் இரண்டாவது கிலாஃபத்தின் போது பைஅத் செய்தனர்.

போட்டோகிராபர் ஆக இருந்தார். ஏறக்குறையகடந்த இருபது வருடங்களாக ஜுமுஆ நாளில் பைத்துஸ் ஸிக்ர் பள்ளிவாயிலின் மெயின் கேட்டில் டுயூட்டி கொடுத்து வந்தார். ஷஹாதத்தின் போது இவரது வயது 57. மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். தாருஸ் ஸிக்ரின் மெயின் கேட்டில் டுயூட்டி கொடுத்துக் கொண்டிருந்த போது பலமுறை எவராவது தாக்க வந்தால், எனது பிணத்தின் மீது தான் கடந்து போக வேண்டும் என்று கூறி வந்தார். சம்பவத்தன்று சுமார் 11.00 மணிக்கு டுயூட்டிக்கு வந்தார். முதல் வரிசையில் நின்றார். 1.40 மணிக்கு தீவிரவாதிகள் வரும்போதே சுட்டுக் கொண்டே வந்தனர். ஒருவனை இவர் கெட்டியாக பிடித்து விட்டார். இன்னொருவன் சுட்டு வீழ்த்தி விட்டான்.

இவரது மனைவி சில நாட்களுக்கு முன் கனவில், ஒரு பெட்டி இருந்தது. அது சாதாரண பெட்டியை விட சற்று உயரமாக இருந்தது. அதன் அருகில் ஒரு மேஜை உள்ளது. அவர் அந்த மேஜையில் ஏறி பெட்டியில் போய் படுத்துக் கொண்டார். அதில் போய் ஏன் படுக்கிறீர்கள்? என்று கேட்ட போது இது நன்றாக இருக்கிறது என்று பதிலளித்தார். இடையில் ஒரு சம்பவம் விடுபட்டு விட்டது. மனைவி கூறுகிறார்: ஜுமுஆவுக்கு செல்வதற்கு முன் அவருக்கு பொன்னிற கோட்-ஐ ஸ்திரி செய்து கொடுத்தேன். இன்று நீங்கள் மாப்பிள்ளை dress அணிந்துள்ளீர்கள் என்று கூறினேன். நன்றாக ஆயத்தம் செய்தவாறு ஜுமுஆவுக்கு சென்றார். எண்ணற்ற சிறப்புகளைக் கொண்டவர். பொறுப்புணர்வு மிக்கவர். யாரையும் புகார் சொல்ல மாட்டார். தொழுகையில் பேணுதல் உள்ளவர்.

அருகிலுள்ள கல்லூரியிலிருந்து பையன்களை ஜெராக்ஸ் எடுப்பதற்காக வந்தால் பைசாவை எண்ணிப் பார்க்காமலேயே வைத்துக் கொள்வார். சிலரிடம் பைசா இருக்காது என்றாலும் கணக்குப் பார்ப்பதில்லை என்று கூறுவார். ஒரு சமயம் எதிரிகள் அவருக்கு எதிரிலேயே ஜமாஅத்திற்கு எதிரான கருத்துக்களை கொண்ட போஸ்டர்களை ஒட்டினர். இவர் சண்டையிடவில்லை. பிறகு அதனை அகற்றி விடுவார். மகனிடம் அவ்வப்போது, யாராவது வரம்பு மீறினால் அமைதியாக வந்து விட வேண்டும். நீயும் பதிலுக்கு பேசினால் பிரச்சனையை நீயே முடித்து விட்டதாக பொருள். ஆனால் நீ அல்லாஹ்விடம் விட்டால் கண்டிப்பாக அல்லாஹ் பதிலடி கொடுப்பான் என்று கூறுவார்.

அடுத்து **மலக் ஹஸன் குர்ஷித் அவான் சாஹிப் ஷஹீது.** இவர் குர்ஷித் அவான் சாஹிபுடைய மகன் ஆவார். ஷஹீது மர்ஹூம் செக்வால் மாவட்டத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தையும், பாட்டனாரும் பிறப்பால் அஹ்மதிகளாக இருந்தனர். கொஞ்ச நாட்களுக்கு முன்பு இவரது குடும்பத்திலுள்ள சிலர் பலவீனத்தைக் காட்டியவாறு ஜமாஅத்தை விட்டு விலகினார். ஷஹீது மர்ஹூம் அல்லாஹ்வின் அருளால் ஷஹாதத் வரை ஜமாஅத்துடன் தொடர்பு வைத்திருந்தார். சைய்யது குர்ஷித் அவான் சாஹிப் என்ற இவரது ஒரு சகோதரர் இப்போது ஜெர்மனியில் இருக்கிறார். அவரும் ஜமாஅத்துடன் நல்ல தொடர்புடன் இருந்து வருகிறார். ஷஹாதத்தின் போது இவரது வயது 24. திருமணமாகாதவர். மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். சம்பவநாளன்று தாருஸ் ஸிக்ரில் ஜுமுஆ தொழுகைக்கு சென்றிருந்தார். தீவிரவாதிகள் வந்த போது வீட்டிற்குப் போன் செய்து பள்ளிவாயிலில் தாக்குதல் நடைபெறுகிறது. நான் காயமுற்றுள்ளேன். துஆ செய்யுங்கள் என்றார். அதே வேளையில் தீவிரவாதிகளின் துப்பாக்கி சூட்டால் ஷஹீதாகி விட்டார். இவரது குடும்பத்தைச் சேர்ந்த ஜமாஅத் அல்லாத உறுப்பினர்கள் இவர் அஹ்மதியாக இருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். அதனால் இவரது பெற்றோர்களும் நெருக்கடிக்கு உள்ளாயினர். அஹ்மதிகள் இவருக்கு ஜனாஸா தொழ வைத்தால் இந்த ஊரில் பெரும் குழப்பம் ஆகிவிடும் என்று தெரிவித்தனர். இங்கு கத்மே நுபுவ்வத்தைச் சேர்ந்தவர்கள் உண்மையில் இவர்களை பெயர்தாங்கிய கத்மே நுபுவ்வத் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றே கூற வேண்டும். மிகவும் துடிப்பாக இருக்கிறார்கள். எனவே இக்காரணங்களுக்காக அஹ்மதி சகோதரர்களை ஜனாஸா தொழ விடவில்லை. அவர்களே தொழுகை நடத்தி அடக்கம் செய்து விட்டனர். இந்நிகழ்வை அந்த ஊரைச் சேர்ந்த பொதுமக்கள் கவலைக்குரிய ஒன்றாகவே கருதினர். ஷஹீது மர்ஹூமின் தந்தை முதலில் எதிர்ப்புகளின் காரணமாக விபரங்களை தர மறுத்தார். உங்கள் மகன் உயிரைக் கொடுத்து உங்களுக்கு தூதுச் செய்தி கொடுத்துள்ளார். ''உயிரே போனாலும் உலக மக்களுக்கு பயப்படக் கூடாது'' என்பதே அந்த தூதுச் செய்தி என்று தந்தையாருக்கு புரிய வைக்கப்பட்டது. ஷஹீது மர்ஹூமுடைய தியாகத்தை மறைப்பது அவருக்கு செய்யும் அநீதியாகும் என்று புரிய

வைக்கப்பட்டது. ஆனாலும் அவர் ஷஹீதான மகனைப் பற்றிய விபரங்களைக் கொடுக்கவில்லை. அல்லாஹ் ஷஹீதுடைய தகுதிகளை உயர்த்துவானாக! இவரது தியாகம் இவரது வீட்டினரின் கண்கள் திறப்பதற்கு காரணமாக அமையட்டுமாக! ஷஹீது மர்ஹூமாகிய மலக் ஹஸன் குர்ஷித் சாஹிப் பற்றி சக்வால் அமீர் சாஹிப் எழுதுகிறார். அல்லாஹ்வின் பக்கம் அழைக்கும் பணிக்கு எந்த வாய்ப்பையும் கைவிட மாட்டார். இவரது தந்தை மலக் குர்ஷித் சாஹிப் கடந்த சில வருடங்களாக ஜமாஅத்தை விட்டு விலகிய போது ஷஹீது மட்டுமே கொள்கையில் உறுதியாக நின்றார். இறுதி மூச்சு வரை உறுதியாக நின்றார். ஜுமுஆ தொழுகையை தாருஸ் ஸிக்ரில் தொழுவார். பலமுறை இவரது பெற்றோர் வற்புறுத்தியும், இவர் ஜமாஅத்தில் உறுதியாக நின்றார்.

அடுத்து **மஹ்மூத் அஹ்மத் ஷாஹ் சாஹிப் ஷஹீது.** இவர் கொள்கைப் பரப்புனரான சவுத்ரி குலாம் அஹ்மத் சாஹிபுடைய மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமுடைய குடும்பம் குஜ்ராத் மாவட்டத்தைச் சேர்ந்தது. ஷஹீது மர்ஹூமுடைய தாதா ஃபஸ்ல் தாத் சாஹிப் பைஅத் செய்திருந்தார். தந்தையாரோ காழ்ப்புணர்சசி சிந்தனை உள்ளவராக இருந்தார். ஒருமுறை தப்லீகே ஹிதாயத் என்ற நூல் தரையில் சிதறிக் கிடந்ததைப் பார்த்தார். பிறகு அவற்றை படிக்க வேண்டாம் என்று கருதியவாறு மேலோட்டமாக பார்த்த போது ஆர்வம் ஏற்பட்டது. முழுமையாக படித்தார். படித்து விட்டு நான் பைஅத் செய்ய வேண்டும் என்று கூறினார். 1922 -ல் 11 -வது வயதில் பைஅத் செய்தார். ஷஹீது மர்ஹூமின் தந்தை நாஸிர் தாஸில்தார் ஆக இருந்தார். லஞ்சம் வாங்கமாட்டார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் சிந்து பகுதியிலிருந்த நிலத்தை கவனித்து வந்தார். நல்ல தூய முத்தகியாக இருந்தார்கள். ஷஹீது மர்ஹூம் 31 மே 1962-ல் பிறந்தார். பிறப்பிலேயே வக்ஃப் செய்யப்பட்டார். 1986 -ல் ஜாமிஆ தேர்ச்சி பெற்றார். தமது முஹல்லா ஜமாஅத்தில் பல பொறுப்புகளை வகித்து வந்தார். இது அல்லாமல் காலித் என்ற மாதப் பத்திரிகையின் நாயிப் எடிட்டராகஇருந்தார். பாகிஸ்தான் நகரங்களில் கொள்கை பரப்புநராக பணியற்றியுள்ளார். அதுவன்றி தன்சானியாவில் 11 வருடங்கள் முரப்பியாக இருந்தார். பைத்துந்நூர் மார்டன் டவுணில் மூன்று மாதங்கள் முன்புதான் நியமிக்கப்பட்டார். ஷஹாதத்தின் போது இவரது வயது 48. வஸிய்யத் அமைப்பில் சேர்ந்திருந்தார். மஸ்ஜித் நூர் மார்டன் டவுணில் ஷஹாதத்தின் பானத்தை அருந்தினார். சம்பவத்தன்று புதிய துணி அணிந்து கொண்டார். தமது வீட்டிலேயே இரு ரக்அத்துகள் தொழுதார். பிறகு தனது மகனுடன் ஜுமுஆவுக்கு வந்து மெயின் ஹாலை அடைந்தார். தாக்குதல் நடைபெற்ற போது மக்களை துஆ செய்து கொண்டிருக்குமாறு கவனமூட்டிக் கொண்டே இருந்தார்.

மக்கள் கூறுகின்றனர்: தீவிரவாதிகள் மஸ்ஜிதுக்குள் வந்த போது உரத்த குரலில் அல்லாஹு அக்பர் என்று முழங்கினார். தரூதும் ஓதி வந்தார். நெஞ்சில் இரு குண்டுகள் பாய்ந்திருந்தன. இதனால் ஷஹாதத் நிகழ்ந்தது. இந்த சம்பவத்தில் அல்லாஹ்வின் அருளால் இவரது மகன் பாதுகாப்பாக இருந்தார்.

ஷஹீது மர்ஹூமின் மனைவி கூறுகிறார்: ஷஹாதத்திற்கு ஒரு நாள் முன்பு 27ம் தேதி இரவு M.T.A -வில் கிலாஃபத் உடன்படிக்கை ஒளிபரப்பானது. இவர் உரத்த குரலில் அந்த உடன்படிக்கையை திரும்பு மொழிந்தார். ஜுமுஆ நாளில் குத்பா முடிந்ததும் முழு ஜமாஅத்தையும் இந்த உடன்படிக்கை வாசகத்தை சொல்ல வைக்க வேண்டும் என்று விரும்பியிருந்தார். ஆனால் அல்லாஹ்வின் விருப்பம் வேறாக இருந்தது. மனைவி மேலும் கூறுகிறார்: அவர் நல்ல தைரியமாக இருப்பார். ஜமாஅத்திற்கு எதிராக சட்டம் இயற்றப்பட்டு சில காலம் கழித்து தமது சகோதரியுடன் வெளியூர் சென்றார். கலிமா தய்யிபா பேட்ஜை உடன் சட்டையில் அணிந்திருந்தார். அவரது சகோதரிக்கு பயம் இருந்தது. அதனை வெளிப்படுத்தியபோது ஷஹீது மர்ஹூம் கூறினார். உனது ஈமான் என்ன இவ்வளவு பலவீனமாகவா இருக்கிறது? ஸ்டேஷனில் இறங்கியதும் அங்கிருந்த போலீஸை இவராகவே நேரில் சந்தித்து கை குலுக்கினார். தங்கையிடம், பார்த்தாயா? நான் அவரிடமே போய் சலாம் சொல்லி விட்டு வந்து விட்டேன் என்று கூறினார்.

அவருக்கு இறைவன் மீது தவக்குல் இருந்தது. ஷஹீதின் மனைவி கூறுகிறார்: மர்ஹூம் தன்சானியாவில் பணியாற்றியபோதும் எதிர்ப்பு ஏற்பட்டது. அப்போதும் இறைவனது உதவிகளைக் கண்டார். 1999 -ல் ஜமாஅத்தின் எதிரியான சேக் ஸய்யிதி என்பவர் இவர் மீது ஒரு குற்றச்சாட்டை வைத்தார். இவர் ஜமாஅத்தின் பிரச்சார நிலையத்தில் சட்டத்திற்குப் புறம்பாக செயல்பட்ட சிலருக்கு அடைக்கலம் கொடுத்து வைத்திருந்ததாக கூறினர். போலீஸ் மிஷன் ஹவுஸ் வந்து தேடிப் பார்த்த போது முரப்பி சாஹிபை அழைத்துச்

சென்றது, முரப்பி சாஹிப் போலீஸ் ஸ்டேஷன் போய் அங்கு தன்னையும் ஜமாஅத்தைப் பற்றியும் அறிமுகம் செய்தார். காவல்துறையினர் மன்னிப்பு கேட்டு அவரை விட்டு விட்டனர். பிறகு அந்த காவல்துறையினருடன் நல்ல தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். பிறகு சிறிது காலத்திற்குப் பிறகு அந்த சேக் ஸய்யிதி என்ற எதிரியின் மீது அதே குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தன்சானியா அரசு அவரை சவூதி அரேபியாவிடம் ஒப்படைத்தது. இந்த செய்தி பத்திரிகைகளிலும் வெளி வந்தது.

தன்சானியாவில் ஒருமுறை ஜமாஅத்திற்காக சுற்றுப்பயணம் செய்தார். அவர் மனைவி கூறுகிறார்: அப்போது எனக்கு மலேரியா காய்ச்சல் வந்தது. நான், எனது உடல்நிலை சரியில்லை. நீங்கள் போகப்போகின்றீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர், நான் அல்லாஹ்வின் வேலையைச் செய்வதற்காக போகிறேன். உன்னையும் அல்லாஹ்வின் பொறுப்பில் விட்டு விட்டுப் போகிறேன் என்றார்.

ஷஹீது மர்ஹூமின் மனைவி மேலும் கூறுகிறார்: மார்டன் டவுனில் மஸ்ஜிதில் நியமிக்கப்பட்டு சிறிது காலமே ஆகிறது. நியமிக்கப்பட்ட காலத்திலிருந்து மிரட்டல் Phone Call மற்றும் SMS -கள் வந்து கொண்டிருந்தன. முதலில் இதுபோன்ற மிரட்டல்கள் வரும் போது முரப்பி சாஹிப் ஒரு திருமண வீட்டில் இருந்தார். தம்மை சிலர் பின்தொடர்கிறார்கள் என்று தெரிந்து கொண்டார். குத்தாமுல் அஹ்மதிய்யா உறுப்பினர்கள் அவரை பாதுகாப்பாக வீட்டில் கொண்டு வந்து விட்டனர். வீட்டுக்கு வந்த பிறகு என்னிடம், எத்தகைய மகத்தான ஜமாஅத் பாருங்கள். இந்த குத்தாம்களை விட நமக்கு உலகில் வேறு எந்த சொந்தமும் இல்லை. எப்போதும் நம்மை பாதுகாக்க இவர்கள் தயாராக இருக்கின்றனர்! என்று கூறினார். முரப்பி சாஹிப் கூறுகிறார்: நான் அல்லாஹ்விடம் துஆ செய்கிறேன். இறைவா! எனது தியாகத்தை ஏற்க விரும்பினால் நான் தயாராக உள்ளேன். எனது குழந்தைகளை எப்போதும் ஜமாஅத்துடன் இணைத்து வைப்பாயாக!

அவருடைய சகோதரிகளிடமிருந்து போன் வந்தால், சகோதரிகள் அவரிடம் விடுமுறை எடுத்து விட்டு ரப்வா வாருங்கள் என்று கூறினால், மற்ற அஹ்மதிகள் தியாகம் செய்கிறார்கள் எனில் நாம் ஏன் தியாகம் செய்யக் கூடாது? மைதானத்தை விட்டு விட்டு நான் ஏன் ஓட வேண்டுமா? என்று கேட்பார். நான் நிலைமைகளை பார்த்து விட்டு பதறிப் போய் அழத் தொடங்கினால், ஷஹீதானவர்களின் குடும்பத்தை அல்லாஹ் வீணாக்க மாட்டான்; அவனே பாதுகாப்பான் என்று கூறுவார்.

ஷஹீது மர்ஹூமுக்கு தஃவத்தே இலல்லாஹ்வின் மீது ஆர்வம் இருந்தது. ஷஹாதத்திற்கு ஒரு மாதம் முன்பு அஹ்மதியல்லாத ஒரு டாக்டர் தமக்கு திருப்தி அளிக்கும் வகையில் எடுத்துச் சொன்னால் ஏற்றுக் கொள்வேன் என்றார். பல முரப்பிகளுடன் விவாதம் நடைபெற்று விட்டது. திருப்தி ஏற்படவில்லை. ஷஹீது மர்ஹூம் பல மணி நேரங்கள் இவருக்கு தப்லீக் செய்துள்ளார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இல்ஹாம்கள், கவிதைகளை மிகவும் ரசணையுடன் எடுத்து வைப்பார். உணர்ச்சிப்பெருக்கால் எடுத்துரைப்பார். பிறகு அந்த டாக்டர் சாஹிப்கூறினார். இன்று எனக்கு ஓடி ஒளிவதற்கு இடமே இல்லை. இவருடைய தப்லீகை கேட்டு நான் திருப்தி அடைந்து விட்டேன். தன்னையே மறந்து ஒருவர் எனக்கு தப்லீக் செய்கிறார். இவருடைய ஜமாஅத் எப்படி பொய்யான ஜமாஅத்தாக இருக்க முடியும் என்று கூறினார். பிறகு அவர் பைஅத் செய்து விட்டார்.

தப்லீக் செய்வதற்கு என்று ஒவ்வொருவருக்கும் ஒருமுறை உண்டு. இவ்வாறு எடுத்துரைக்கும் போது அது பயனளிக்கவும் செய்கிறது. பிறகு அந்த டாக்டர் பைஅத் செய்து விட்டார். முரப்பி சாஹிபுக்கு பெற்றோர்களைத் தவிர பிற குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஜமாஅத்திற்கு வெளியே இருக்கின்றார்கள். இறுதி மூச்சு வரை அவர்களுக்கு தப்லீக் செய்து வந்தார்.

ஒவ்வொரு சுக, துக்கங்கள் தமது அஹ்மதியல்லாத உறவினர்களின் வீடுகளில் நடைபெறும் போதும் தமது மகனை அழைத்துக் கொண்டு போய் காண்பிப்பார். பாருங்கள், நமக்கும் இவர்களுக்கும் என்ன வித்தியாசம் உள்ளது. இவர்களது கழுத்துகளில் தீய சடங்குகள் தான் என்ற தூக்கு கயிறு தொங்குகிறது. நாமோ கிலாஃபத் என்ற மாலையில் கோர்க்கப்பட்டுள்ளோம்.

இவரைப் பற்றி ஒரு சாஹிப் எனக்கு கடிதம் எழுதியுள்ளார். 2006 -ல் எனக்கு தகவல் கிடைத்தது. மஹ்மூத் ஷாஹ் சாஹிப் பிண்டியிலுள்ள பைத்துல் ஹம்து -ல் மரி என்ற இடத்தில் முபல்லிக் ஆக

நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்று கேள்விப்பட்டேன். என்னை அமீர் சாஹிப் அவர்கள் சதர் ஹல்கா மற்றும் சதர் பைத்துல் ஹம்து மேற்கு போன்ற பொறுப்புகளுடன் மரிரோட் முரப்பி தங்குமிடம், விருந்தினர் இல்லம் போன்றவற்றை கண்காணிக்கும் பொறுப்பையும் கொடுத்திருந்தார். முரப்பி சாஹிபின் உணவு மற்றும் தங்குமிடம் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்யுமாறு எனக்கு அமீர் சாஹிபிடமிருந்து தகவல் வந்தது. விருந்தினர் விடுதியில் உணவுக்கான சிறப்பான ஏற்பாடு எதுவும் இருந்ததில்லை. வழங்கப்படுகிற உணவை பொறுமையுடன் உண்டு வந்தார். முரப்பி தங்குமிடம், விருந்தினர் இல்லம் இரண்டும் மரிரோடில் அமைந்திருந்தது. மூன்று மாடிகள் இருந்தன. கீழ்த்தளத்தில் முரப்பி இல்லம் இருந்தது. முரப்பி தங்குமிடத்தை மூன்றாவது மாடிக்கு கொண்டுபோய் விட வேண்டும். கீமுள்ள இரண்டு தளங்களையும் விருந்தினர் இல்லமாக மாற்ற வேண்டும் என்று ஜமாஅத் முடிவு செய்தது. மூன்றாவது மாடியில் கடும் வெயிலின் காரணமாக அதிக சூடு இருந்தது. முரப்பி சாஹிப் மிகவும் பொறுமையுடன் அங்கு தங்கியிருந்தார். ஒருபோதும் புகார் கூறியதில்லை.

காலத்தின் கலீஃபாவின் குத்பாக்களை மிகவும் கனவமாகக் கேட்பார். ஜமாஅத் சகோதரர்களுக்கும் கேட்குமாறு மீண்டும் மீண்டும் அறிவுரை கூறி வந்தார்.

ஏதாவது ஜமாஅத்தில் டிஸ் பழுதாகி விட்டால் அதனை சரி செய்யாமல் உட்காரவே மாட்டார். முரப்பி சாஹிப் மென்மையான உள்ளம் வாய்ந்தவர். ஒவ்வொருவருடனும் நட்புடன் பழகினார். ஜமாஅத்தில் ஒவ்வொருவருடனும் நட்புடன் பழகினார். ஜமாஅத்தில் ஒவ்வொருவருடனும தனித்தொடர்பு வைத்தார். ஜுமுஆ குத்பாக்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களிலிருந்து மேற்கோள்களையும், கவிதைகளையும் அதிகமாக பயன்படுத்துவார். எதிரிகள் செயலற்றுப் போகவும், ஜமாஅத்திற்கு வெற்றி கிடைக்கும் என்றும் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். மே 28 ம் தேதிக்கு 2-3 ஜுமுஆக்களுக்கு முன்பு தஃலிமுல் குர்ஆன் தொடர்பாக மார்டன் டவுணில் குத்பா கொடுத்தார். அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஓர் எச்சரிக்கையை வாசித்துக் காட்டினார்.

திருக்குர்ஆனை முறைப்படி படிக்காமல் ஜமாஅத்தில் இருப்பவர்களைக் குறித்து அந்த மேற்கோள் அமைந்திருந்தது. அதனை வாசித்துக் காட்டும் போது அவரால் தனது உணர்ச்சியை அடக்க முடியாமல் இருப்பது அவரது குரலில் வெளிப்பட்டு விட்டது.

கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்பின் புனிதத்துவத்தை பொருத்தமட்டில் ஒரு கூர்மையான வாளாக இருந்தார். ஜமாஅத் மற்றும் கிலாஃபத் பற்றி சாதாரணமாக யாராவது தவறாக கூறினாலும் அவரது வாயை அடைத்து விடுவார். எதிராளி தமது குற்றத்தை ஒப்புக் கொள்ளும் வரை விடவே மாட்டார். ஹாஸிம் சித்தீக் சாஹிப் மேலும் எழுதுகிறார். எனது ஹல்காவின் மஜ்லிஸே ஆமிலா கூட்டம் இரவு 9-10 மணிக்கு ஆரம்பமாகும். கடும் குளிரிலும் கூட சைக்கிளில் வந்து கூட்டத்தில் கலந்து கொள்வார். தமது வழிகாட்டல்களை வழங்குவார்.

மேலும் சித்தீக் சாஹிப் எழுதுகிறார்: இவர் லாஹுருக்கு மாற்றப்பட்ட போது மகிழ்ச்சியுடன் என்னிடம், எனக்கு மார்டன் டவுண் பள்ளியில் நியமணம் ஆகி உள்ளது என்றார். உடனே நான், அரசு ஊழியராகிய எனக்கும் லாஹுரில்தான் போஸ்டிங் ஆகி உள்ளது என்றேன். நகைச்சுவையாக சித்தீக் சாஹிப் லாஹுர் வரை நாம் ஒன்றாக போவோமா? அல்லது அதற்கு மேலும் ஒன்றாகப் போவமோ? என்றார்.

இவரைப் பற்றி ஒரு முரப்பி சாஹிபும் எழுதியுள்ளார்: ஷஹீது சாஹிப் மிகவும் சிரித்த முகம் உடையவர். கடுமையான துயரங்களையும் சகித்துக் கொணடு சிரித்துக் கொண்டிருப்பர். தைரியமிக்கவர். தப்லீகில் ஆர்வம் உள்ளவர். எனக்கு தன்சானியாவில் நியமணம் ஆனபோது அவருடன் சேர்ந்து தாருஸ் ஸலாமிலிருந்து மொரோகோராவுக்கு சென்றேன். வழியில் சில மவ்லவிகள் தென்பட்டனர். மஹ்மூது ஷாஹ் சாஹிப் வண்டியை நிறுத்தி விட்டு அவர்களுக்கு தப்லீக் செய்யத் தொடங்கினார். மாலையும் ஆகி விட்டது. வழியும் ஆபத்தானது. ஒரு பெரும் கூட்டத்திற்கு தப்லீக் செய்து மவ்லவிகளை பதிலற்றவர்களாக்கி ஓட வைத்தார். திரும்ப வண்டியில் ஏறி என்னிடம், இங்கு நமக்கு மார்க்க சுதந்திரம் இருக்கிறது. பயப்பட வேண்டாம். பகிரங்கமாகவே தப்லீக் செய்யலாம் என்றார்.

பிறகு இவரைப் பற்றி மேலும் எழுதுகிறார்: **ஷஹீது** மர்ஹூம் பல சகோதரிகளுடன் பிறந்த ஒரு பையன் ஆக இருந்தார். நோயுற்ற தாயாருக்கு நல்ல தொண்டு செய்துள்ளார். வெளிநாட்டில் இவர் நியமனம் செய்யப்பட்ட போது, நோயுற்ற தாயரை யாரிடம் விட்டு செல்வது? என்ற சங்கடம் இருந்தது? இந்த அடிப்படையில் தாயார் இருக்கும் வரை பாகிஸ்தானிலேயே பணி செய்து வந்தார்.

முரப்பி சாஹிப் மேலும் எழுதுகிறார்: எனக்கு தன்சானியாவில் 1899 -ல் முரப்பி மற்றும் அமீர் ஆக நியமனம் ஆன போது **ஷஹீது** சாஹிப் தன்சானியாவில்தான் இருந்தார். நல்ல ஆர்வமாக தப்லீக் செய்வார். புதிய புதிய இடங்களில் தொடர்பு கொண்டு வீடியோ ஆடியோ கேசட்டுகள், மஜ்லிஸ்கள், தப்லீக் கேம்ப் -கள் நடத்துவார். அதன் விளைவாக அல்லாஹ் அங்கு பல ஜமாஅத்துகளை வழங்கினான். தன்சானியாவில் உள்ள விரிங்கா என்ற இடத்தில் தங்கியிருந்தார். அவரது வெற்றிகளைப் பார்த்து உள்ளூர் மவ்லவிகள் மார்க்க உதவிகள் வழங்குகின்ற அரபு அமைப்புகளின் ஏஜென்டுகளை தொடர்பு கொண்டு நமது **ஷஹீது** சாஹிப் செய்வது போன்று தப்லீக் செய்வதற்காக ஏற்பாடு செய்யுமாறு கூறினர். அதன் மூலம் இந்த மஹ்மூது **ஷாஹ்** சாஹிபின் பணியை நிறுத்த வேண்டும். இவ்வாறு அவர்களது முயற்சி நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் எந்த விளைவும் ஏற்படவில்லை. மாறாக அஹ்மதிய்யத் மாநிலம் முழுவதும் விரைவாக பரவி வந்தது. உள்ளூர் உலமாக்களிடம், எல்லா வேலைகளையும் நீங்களும் செய்கிறீர்கள். உங்களுக்கு தேவையான எல்லா வசதிகளையும் கூட நாங்கள் வழங்கியுள்ளோம். உங்களுக்கு மட்டும் எந்த விளைவும் ஏற்படவில்லையே? ஏன் என்று கேட்கப்பட்ட போது, எங்களிடம் ஒரேயொரு குறைதான் இருக்கிறது. அது என்னவெனில், அஹ்மதிய்யா ஜமாஅத்திடம் பாகிஸ்தானி முபல்லிக்குகள் இருக்கிறார்கள். அது நம்மிடம் இல்லை. நமக்கும் ஒரு பாகிஸ்தானி மவ்லவியை தந்தால் அவர்களது வழிகாட்டலின் பேரில் நாமும் வெற்றி பெற்று விடுவோம் என்று பதில் கூறினார்.

பாவம்! இது இவர்களின் தவறான எண்ணமாகும். ஜமாஅத் அல்லாத ஒரு பாகிஸ்தானி மவ்லவி வந்து அவர்களிடம் இஸ்லாத்தை போதித்தாலும் தப்லீகை தவிர ஏசவும் பேசவும் தான் கற்றுத் தரப்போகிறார்கள்.

அடுத்து **வஸீம் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் அப்துல் குத்தூஸ் சாஹிபின் மகன் ஆவார். பூரன் நகரைச் சேர்ந்தவர். **ஷஹீத்** மர்ஹூமின் குடும்பம் மியான் நிஸாமுத்தீன் சாஹிப் (ரலி) அவர்களுடன் தொடர்புடையது. இவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கையில் பைஅத் செய்தவர். பாபு காஸிமுத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர். பாபு காஸிமுத்தீன் சாஹிப் (ரலி) நீண்ட காலம் சியால்கோட்டின் உள்ளூர் அமீர் மற்றும் மாவட்ட அமீராக இருந்தார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாதம் செய்வதற்கு முன் வேலை நிமித்தமாக சியால்கோட்டில் தங்கியிருந்த போது இந்த குடும்பம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் அறிமுகமாகியிருந்தது. வாதத்திற்கு பிறகு சியால்கோட் வந்தால் இதே இடத்தில் வந்து தங்குவார்கள். சியால்கோட்டில் Fsc படித்து விட்டு Ministry of Punjab, Lahore -ல் Space Science -ல் B.Sc. -க்கு தேர்வு செய்யப்பட்டார். அதே யுனிவர்சிட்டியில் M.Sc. Computer Science படித்தார். **ஷஹாதத்**திற்கு முன்பு ஒரு Software Company -ல் மேனேஜராக பணியாற்றினார். அல்லாமா இக்பால் டவுண் மஜ்லிஸின் நாஸிம் அத்ஃபால் ஆக இருந்தார். **ஷஹாதத்**தின் போது இவரது வயது 38. வஸிய்யத் அமைப்பில் இணைந்திருந்தார். தாருஸ் ஸிக்ரில் **ஷஹாதத்**தின் பானத்தை அருந்தினார். **ஷஹீது** மர்ஹூம் எப்போதும் தாருஸ் ஸிக்ரில் தான் ஜுமுஆ தொழுது வந்தார். சம்பவத்தன்றும் மால்ரோட்டில் உள்ள தமது அலுவலகத்தில் இருந்து ஜுமுஆ தொழுவதற்காக தாருஸ் ஸிக்ர் வந்தார். பொதுவாக மெயின் ஹாலில் முதல் ஸஃப்பில் அமர்ந்திருப்பார். சம்பவத்தன்றும் முதல் ஸஃப்பில்தான் இருந்தார். தீவிரவாதிகள் வந்ததும் அமீர் சாஹிபின் கட்டளைக்கிணங்க அங்கேயே இருந்தார். மற்றவர்கள் உயிரை பாதுகாப்பதற்காக பின்பக்க கேட் வழியாக வெளியில் போய்க் கொண்டிருந்தனர். இவரையும் போகுமாறு கூறப்பட்டது. மற்றவர்கள் முதலில் போகட்டும். பிறகு நான் போகிறேன் என்றார். அதே வேளையில் தீவிரவாதியின் குண்டால் **ஷஹீதா**கி விட்டார். **ஷஹீது** மர்ஹூமின் **ஷஹாதத்**திற்குப் பிறகு அவரது அலுவலகத்தில் உள்ளவர்கள் அவரது நினைவாக இரண்டு மணி நேர இரங்கல் கூட்டம் நடத்தினர். எல்லா ஊழியர்களும் இரங்கல் தெரிவிக்க வீட்டிற்கு வந்தனர். நல்ல வார்த்தையில்

ஷஹீதை நினைவு கூர்ந்தனர். இவரது ஷஹாதத்தால் இவரது அலுவலக ஊழியர்கள் மருத்துவமனைக்கு உதவிக்கு வந்து நின்றனர். அடக்கத்திற்காக ரப்வாவுக்கும் வந்திருந்தனர். இவரது கம்பெனியின் டைரக்டர் கராச்சியிலிருந்து சியால்கோட்டிற்கு இரங்கல் தெரிவிப்பதற்காக வந்திருந்தார். ரப்வாவுக்கும் வந்திருந்தார். மிகவும் கஷ்டத்தை வெளிப்படுத்தினார்.

ஷஹீது மர்ஹூமின் மனைவி கூறுகிறார்: தமது பெற்றோர்கள், பெரியவர்களுக்கு மிகவும் கட்டுப்படக் கூடியவர். ஒவ்வொருவருடனும் கண்ணியத்துடன் நடந்து கொள்வார். பெற்றோரின் முன் உரத்த குரலில் பேசமாட்டார். அதனை பாவமாக கருதினார். ஜமாஅத்தில் அதிகமாக பணி செய்யும் உறுப்பினராக இருந்தார். லாஹூர் ஜமாஅத்தின் சந்தாக்களுக்காக Software தயார் செய்தார். நாஸிம் அத்ஃபாலாக பணி செய்தார். குழந்தைகளுடன் நல்ல அன்பு கொண்டவர். ஷஹாதத்திற்குப் பிறகு இவரது ஜனாஸாவை இவரது குடும்பத்தினர் லாஹூரிலிருந்து சியால்கோட் கொண்டு சென்றனர். அங்கு ஜனாஸா தொழ வைத்த பிறகு ரப்வாவில் கொண்டு வந்து அடக்கம் செய்தனர். வஸீம் சாஹிபுக்கு ஷஹாதத் ஆவதில் அதிக விருப்பம் இருந்தது. எனது வாழ்வில் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் எனது மார்பு எல்லாருக்கும் முன்பு இருக்கும் என்று கூறுபவராக இருந்தார்.

இம்ரான் நதீம் சாஹிப் இவரைப் பற்றி கூறுகிறார்: நல்ல மார்க்க இயல்பு கொண்ட மனிதர். யாராவது அவரிடம் எதுவும் சொன்னால் மிக அமைதியாக அதனை செவிமடுப்பார். அவர்கள் சொல்கிறபடி செய்வார்.

ஜமாஅத் நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைப்பதற்காக குழந்தைகளை பொறுப்புடன் வண்டியில் அழைத்து வருவார். பிறகு திரும்ப பிள்ளைகளை வீட்டில் கொண்டு வந்து விடுவார். இறுதி மூச்சு வரை இந்த ஜமாஅத் பணிகளைச் செய்து கொண்டிருந்தார். அல்லாமா இக்பால் டவுண் ஹல்காவின் சதர் சாஹிப் கூறுகிறார்: மிகவும் தூய்மையான அஹ்மதியாவார். குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பணிகளில் மிகவும் ஆர்வம் உள்ளவராக இருந்தார். அத்ஃபால்களின் தஃலிம் – தர்பிய்யத்தில் சிறந்த வழிகாட்டியாக விளங்கினார். வஸீம் சாஹிப் ஐந்து சகோதர சகோதரிகளில் மூத்தவர் ஆவார். நல்ல உழைக்கக்கூடிய இளைஞராகவும் இருந்தார். இவரது தாயார் இவரது படிப்பிற்காக முக்கிய கனவம் செலுத்தியுள்ளார். பெற்றோர் குறைந்த படிப்பறிவு கொண்டவர்களாக இருந்தபோதிலும் பெற்றோருக்கு தமது இந்த மகனாவது நல்ல கல்வியைப் பெற வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. இவருக்கும் கல்வி கற்பதில் மிகவும் ஆர்வம் இருந்ததால் வெற்றி பெற்றார்.

இவரது மனைவி கூறுகிறார்: இவரது சிறப்புகளை எண்ணிச் சொல்லிவிட முடியாது. ஹுஸூர் நான் ஒன்றை மட்டும் கூறுகிறேன். இவர் மலக்குகளின் பண்பு கொண்ட மனிதர் ஆக இருந்தார் என்று நான் கூறினால் அது பொய்யாகாது. பொய் முற்றிலும் இவருக்கு ஆகாது. வஸீம் சாஹிப் மாதரி எவரும் இருக்க முடியாது என்று குடும்பத்தினர் கூறுகின்றனர். வஸீம் சாஹிபிற்கு அவரது உயர் தகுதிகளைப் பார்த்துதான் இத்தனை உயர் பதவிகளை அல்லாஹ் வழங்கியுள்ளான் என்று கருதுகிறேன். வஸீம் சாஹிப் பெற்றோருடைய கண்ணியம் மற்றும் என்னுடைய கண்ணியம் மட்டுமல்ல முழு குடும்பத்தின் கண்ணியத்தையும் மேலோங்கச் செய்து விட்டார். ஜமாஅத்தின் அன்பு உள்ளத்தில் நிரம்பி இருந்தது.

அல்லாமா இக்பால் டவுணின் நாஸிம் அத்ஃபால் ஆக இரண்டு ஆண்டுகளாக இருந்தார். பிள்ளைகளிடம் மிகவும் அன்பு காட்டுவார். பல்வேறு பணிகளுக்கு மத்தியிலும் போட்டிகளுக்காக குழந்தைகளை தயார்படுத்துவார். பலவீனமான குழந்தைகள் மீது கவனம் செலுத்துவார். அத்தகைய குழந்தைகளின் பெற்றோர்களிடமும் உங்கள் குழந்தைகள முன்னே கொண்டு வாருங்கள் என்று கவனமூட்டுவார். எமது மஜ்லிஸின் குழந்தைகள் பரிசுகள் பெறும் போது வஸீம் சாஹிப் மிகவும் மகிழ்ச்சி அடைவார். குழந்தைகளை தனது வண்டியில் தாருஸ் ஸிக்ர் அழைத்து வந்து மீண்டும் வீட்டில் கொண்டு விடுவார். ஒவ்வொரு பணியையும் முயன்று செய்வார். தமது அலுவலக பணிகளுக்கு நடுவில் மாலையில் தாருஸ் ஸிக்ருக்கும் கூட்டத்திற்கும் செல்வார். ஜமாஅத்துடன் தொழுபவராக இருந்தார். அலுவலகத்தில் இருக்கும் போது கூட தொழுகை வேளையில் முறையாக தொழுது விடுவார். வஸீம் சாஹிப் தொழுகைகளை நிறைவேற்றியவாறு மற்ற கடமைகளையும் செய்து விடுவார். இவர் தொழுகையில் கவனமாக இல்லை என்று காட்டுகிற எந்த ஒரு செயலும் தொழுகையில் இவர் செய்வதை எவரும் பார்த்ததில்லை. இறைவனை கண் முன்னால் கண்டு தொழுவதைப் போன்று தொழுகையை நிறைவேற்றுவார்.

மேலும் பொருள் தியாகத்திலும் வஸீம் சாஹிப் முன்னணியில் நிற்பார். எப்போதும் தனது சம்பளத்தில் பத்தில் ஒன்றை வழங்கி விடுவார். அது தவிர மற்ற சந்தாக்களிலும் பங்கேற்பார். தமக்காக வீண் செலவுகளை செய்யமாட்டார். தமது பெற்றோருக்கு முன் உரத்த குரலில் பேசியதில்லை. மற்ற எவரிடமும் உரத்த குரலில் பேசமாட்டார். மிக மென்மையானவர். இவருடன் வாழ்ந்த எனது முழு திருமண வாழ்விலும் ஒரு கடும் சொல்லை வாயிலிருந்து கேட்டதில்லை. வஸீம் சாஹிபின் முகம் எப்போதும் புன்னகை பூத்தவண்ணம் இருக்கும். நான் ஏதாவது விஷயத்தில் கோபமுற்றால் கூட மென்மையாக சமாளிப்பார். கோபத்தை விடும் வரை அவரும் சமாளிப்பதை விடமாட்டார். ஷஹாதத்திற்குப் பிறகு அவரது ஜனாஸா வீட்டிற்கு கொண்டு வரப்பட்ட போது எப்போதும் அவரது முகத்தில் காணப்பட்ட அதே நிம்மதி மற்றும் புன்னகையைக் கண்டேன். விருந்தாளிகளை உபசரிப்பார். பெற்றோர் சகோதரிகளையும் எப்போதும் கவனத்தில் வைத்திருப்பார். உறவினர்களிடம் கோபம் கொள்ள மாட்டார். எந்த அளவுக்கு எனில் அவரது அலுவலக ஊழியர்கள் கூட வஸீம் சாஹிப் தமது கீழ்மட்ட அலுவலர்களிடம் கூட கடும் சொல் சொன்னதில்லை என்று கூறுகின்றனர். வஸீம் சாஹிப் தைரியமானவர். அஹ்மதியாக இருப்பதில் அவருக்கு பெருமிதம் இருந்தது. வண்டியில் எப்போதும் நமது பத்திரிகைகளை படித்துக் கொண்டிருப்பார். இவரது ஊழியர்கள் கூட இவரிடம், வஸீம் சாஹிப் தீய எண்ணம் கொண்ட மவ்லவிகள் உங்களைப் பார்த்து, உங்களுக்கு ஏதாவது நஷ்டம் இழைத்து விடப்போகிறார்கள்! என்று கூறுவார்கள். அப்போதெல்லாம் வஸீம் சாஹிப், நண்பரே! ஷஹாதத் பதவி ஒவ்வொருவருக்கும் கிடைக்கக் கூடியதல்ல என்று பதில் கூறுவார். வீட்டில் கூட, தப்லீக் செய்ய அஞ்சக் கூடாது. நம்மை போன்ற பாவிகளுக்கெல்லாம் அத்தகைய (ஷஹாதத்) உயர் பதவி எங்கே கிடைக்கப் போகிறது? என்று கூறுவார்.

இவரது ஜூனியர் கூறுகிறார்: பள்ளியில் முதல் ஸஃப்பில் இருப்பார். சம்பவத்தன்றும் அப்படியே இருந்தார். துப்பாக்கி சூடு ஆரம்பமானதும் மக்கள் ஒரு பக்கமாக குழுமி சிறிது சிறிதாக வெளியேறிக் கொண்டிருந்தனர். அப்போது அஸது என்ற அந்த ஜூனியர் இவரைப் பார்த்து குரல் கொடுத்த போது முதலில் முன்னால் இருப்பவர்கள் போகட்டும்; நான் பின்னால் வருகிறேன் என்றார். அதே வேளையில் வஸீம் சாஹிபுக்கு எட்டு குண்டுகள் வயிற்றில் பட்டன. ஒரு மணி நேரத்திற்குள் ஷஹீதாகி விட்டார்.

அடுத்து **வஸீம் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் செக்வால் மாவட்டத்தைச் சேர்ந்த முஹம்மது அஷ்ரப் சாஹிபுடைய மகன் ஆவார். ஷஹீது மர்ஹூமின் மூதாதையர் செக்வால் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். ஷஹீது மர்ஹூம் மெட்ரிக் வரை தமது சொந்த ஊரில் கற்றார். பிறகு இராணுவத்தில் சேர்ந்து பணியை தொடங்கினார். ஓய்வு பெற்ற பிறகு இஸ்லாமாபாத்தில் ஒரு செக்யூரிட்டி கம்பெனியில் பணியாற்றினார். அப்துர் ரஸ்ஸாக் சாஹிப் இவரது மாமனார் ஆவார். இவர் பாகிஸ்தான் சதர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் நஸாரத் உலியாவின் டிரைவராக பணிபுரிகிறார். வஸீம் அஹ்மத் சாஹிப் ஷஹீதாகும் போது அவரது வயது 54. மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் டியூட்டி கொடுத்துக் கொண்டிருக்கும் போது ஷஹீதானார். தாருஸ் ஸிக்ர் மெயிக் கேட்டில் டியூட்டியில் இருந்தார். தூரத்திலிருந்த தீவிரவாதிகள் துப்பாக்கி சூட்டை தொடங்கினர். இதனால் சம்பவத்தின் ஆரம்பத்திலேயே இவரது ஷஹாதத் நிகழ்ந்து விட்டது. ஷஹீது மர்ஹூமுக்கு இரண்டு திருமணங்கள் நடந்தன. 1983 -ல் முதல் மனைவி மரணித்து விட்டார்கள். அதன்பிறகு நான் குறிப்பிட்ட அப்துர் ரஸ்ஸாக் சாஹிபின் மகளுடன் திருமணம் நடந்தது. இத்திருமணம் 1990 -ல் நடந்தது. இவரது மனைவி கூறுகிறார்: மிகவும் நல்ல மனிதர். சமூகத்தில் ஒவ்வொருவருடனும் நல்ல தொடர்பு இருந்தது. உறவினர்களுக்கு இவர் சிறந்த மனிதராக இருந்தார். குறிப்பாக அனாதை சிறுவர் சிறுமிகளோடு மிகவும் நல்ல முறையில் நடந்து கொள்வார். உறவினர் உறவினரல்லாதவர்; அஹ்மதி, அஹ்மதி அல்லாதவர் எல்லாருடனும் நல்ல முறையில் பழகுபவர். ஜமாஅத் பணியில் நல்ல உணர்வுமிக்கவர். லாஹூரிலிருந்து எப்போது விடுமுறையில் வீட்டுக்கு வந்தாலும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். பள்ளிவாயிலுக்கு வருகிற சிறியவர், பெரியவர் அனைவரும் என்னை கண்ணியத்துடன் சந்திக்கின்றனர் என்று கூறுவார்.

ஷஹீது மர்ஹூமின் குழந்தைகள் கூறுகின்றனர்: எமது தந்தையார் மிக நல்ல மனிதர். எம்மோடு நல்ல தொடர்பு கொண்டவர். எங்களது ஒவ்வொரு விருப்பத்திற்கும் பதிலளிப்பார். மகள் கூறுகிறார்: எனது ஒவ்வொரு விருப்பத்தையும் நிறைவேற்றுவார். குழந்தைகள் மீது நல்ல அன்புள்ளவர். மகள் கூறுகிறார்: அப்பா என்னிடம், உன்னை ரப்வா அனுப்புவேன். படிப்பிற்கு அங்குதான் நல்ல சூழ்நிலை உள்ளது. அங்கேயே

நீ வேலை பார்க்க வேண்டியது வந்தாலும் நல்லது. நானுமே உன்னுடன் வந்து இருக்க வேண்டியது வந்தாலும் சரியே என்று கூறினார். நல்ல அன்பு காட்டும் தந்தையாக இருந்தார்.

மர்ஹூமின் மனைவி மேலும் கூறுகிறார். **ஷஹாதத்திற்கு** சில நாட்களுக்கு முன்பு எனக்கு போன் செய்தவாறு கூறினார். நான் டியூட்டியில் நின்றேன். ஹல்கா சதர் சாஹிப் அங்கு வந்தார். என்னை கடந்து செல்லும் போது அவரிடம் நான், சதர் சாஹிப் காவலர் உடை மிகவும் பழையதாகி விட்டது. எனக்கு புதிய உடை இருந்தால் வரக்கூடியவர்களுக்கு பார்க்க நன்றாய் இருக்கும் என்று கூறினேன். உடனே சதர் சாஹிப் புதிய காவலர் உடை தந்து விட்டார். மேலும் விபத்தன்று சம்பவம் நடக்கும் முன் போன் செய்து, நான் புதிய காவலர் உடை அணிந்துள்ளேன் என்றார். அதே உடையுடன் **ஷஹாதத்தின்** பதவியை பெற்றார்.

மனைவி கூறுகிறார்: **ஷஹாதத்தின்** செய்தி எனக்கு தொலைக்காட்சி மூலம் தான் தெரியும். லாஹூரில் மஸ்ஜிதுகளில் **ஷஹாதத்** நிகழ்ந்தது என்று கூறப்பட்டது. லாஹூர் வஸீம் சாஹிபிற்கு போன் செய்த போது தொடர்பு கிடைக்கவில்லை. வஸீம் சாஹிப் நம்பரிலிருந்து அஹ்மதி சகோதரர் ஒருவர் போன் செய்து, வஸீம் சாஹிப் **ஷஹீதாகி** விட்டார் என்று தெரிவித்தார். இந்த செய்தியைக் கேட்டு எனக்கு மிகவும் துக்கம் ஏற்பட்டது. ஆனால் **ஷஹாதத்** போன்ற பெரும் பதவியை அடைந்ததில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. மேலும் எனது தலை கவுரவத்தால் நிமிர்ந்து விட்டது. அதுவும் மஸ்ஜிதில் தொழுது கொண்டிருப்பவர்களை பாதுகாத்தவாறு **ஷஹாதத்தைப்** பெற்றுள்ளார்.

**ஷஹீது** மர்ஹூம் ஐவேளை தொழுகையில் பேணுதல் உள்ளவர். நன்மையான ஒவ்வொரு பணியிலும் விரைந்து பங்கெடுப்பார்.

அடுத்து **நஸீர் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவர் மேஸ்திரி முஹம்மது யாஸீன் சாஹிபுடைய மகன் ஆவார். **ஷஹீது** மர்ஹூம் தனது குடும்பத்தில் ஒரே அஹ்மதி. ஒரே அஹ்மதியாக இருப்பதால் முழு குடும்பத்திலும் கடும் எதிர்ப்பு நிலவியது. தஜ்னீத் பட்ஜெட் அடிப்படையில் **ஷஹீது** மர்ஹூம் கோட்லக்பக் பகுதியைச் சேர்ந்தவர். ஜுமுஆ தொழுவதற்கு மஸ்ஜித் நூர் மார்டன் டவுண் வருவார். மற்ற தொழுகைகளை தமது பகுதியிலிருந்த தொழுகை மையத்தில் தொழுது கொள்வார். **ஷஹாதத்தின்** போது இவரது வயது 72. மார்டன் டவுணிலுள்ள பைத்துந் நூர் பள்ளிவாயிலில் **ஷஹாதத்தின்** பானத்தை அருந்தினார்.

இவரது ஜனாஸா தொழுகையையும் அடக்கம் இரண்டையும் அவரது அஹ்மதியல்லாத உறவினர்கள் எடுத்துக் கொண்டனர். கோட்லக்பக் கபருஸ்தானில் அடக்கம் செய்து விட்டனர். **ஷஹீது** மர்ஹூம் மார்டன் டவுண் மஸ்ஜிதுக்கு வந்து சேர்ந்துதான் இருந்தார். அதே வேளையில் தீவிரவாதிகள் தாக்குதல் தொடுத்து விட்டனர். குண்டு பட்டு அதே இடத்தில் **ஷஹீதாகி** விட்டார். இவரது ஜனாஸா மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்தது. **ஷஹீது** மர்ஹூமின் அஹ்மதியல்லாத சகோதரியின் மகன் (மருமகன்) இவரது ஜனாஸாவை தொழுகை நடத்தி அடக்கம் செய்வதற்காக எடுத்துச் சென்று விட்டார். மஸ்ஜித் தாருஸ் ஸிக்ரில் இவரது ஜனாஸா காயிப் தொழுகை தொழப்பட்டது.

**ஷஹீது** மர்ஹூம் சந்தாக்களை முறைப்படி வழங்குபவர். குடும்பத்தில் கடும் எதிர்ப்பு இருந்தும் உறுதியாக ஜமாஅத்தில் நின்றார். அவரைப் பற்றி சதர் சாஹிப் கூறுகிறார்: மெயின் பஜாரில் நல்ல விலை மதிப்புள்ள சொத்து ஒன்று இருந்தது. இவர் வாழும் போதே இவரது சகோதரரின் மகன்கள் இவரது கடையை ஆக்கிரமித்துக் கொண்டனர். வாழ்நாள் முழுவதும் எளிய வாழ்க்கை வாழ்ந்தார். குடும்பத்தின் எதிர்ப்பை சகித்துக் கொண்டார். ஆனால் அஹ்மதிய்யத்தை விடவில்லை. பலவீனத்தையும் காட்டவில்லை. **ஷஹாதத்** பெறும் வரை சந்தா பட்ஜெட்டில் பெயர் இருந்தது. மிகக் குறைவான தொகையையே – அதாவது ஒன்றுமில்லை என்று சொல்வதற்கு சமமான மிகக் குறைவான தொகையை சந்தாவாக தந்து வந்துள்ளார். ஆனால் அதை முறைப்படி கொடுத்துள்ளார். சாதாரண உடை அணிந்திருப்பார். குறித்த நேரத்தில் சைக்கிளில் பள்ளியை வந்து சேர்ந்து விட்டார். முதல் ஸஃப்பில் அமர்ந்திருந்தார். ஒவ்வொருவரையும் கண்ணியத்துடன் சந்திப்பார். பள்ளிக்குள் வந்தால் அதிகமான நேரம் அங்கு செலவழிப்பார். அஹ்மதிகளுடன் எவ்வளவு நேரத்தை கழிக்க முடியுமோ அதுவரை நல்லது என்று கூறுவார்.

வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் கடும் எதிர்ப்பு இருந்த போதிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) மற்றும் கலீஃபாக்களின் போட்டோக்களை வைத்திருந்தார். பொறுப்பாளர்களோடும் அன்புடன் நடந்து கொள்வார். தப்லீகில் பைத்தியக்காரர் என்று சொல்லும் அளவிற்கு நல்ல ஆர்வம் உள்ளவர். அவர் வீட்டிற்கு அருகில் ஜமாஅத்திற்கு எதிர்ப்பு அதிகம் இருந்தது. இவர் எந்த பயமும் இல்லாமல் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியை செய்து வந்தார்.

அடுத்து **முஹம்மது ஹுஸைன் சாஹிப் ஷஹீது.** இவர் நிஸாமுத்தீன் சாஹிபுடைய மகன் ஆவார். **ஷ**ஹீது மர்ஹூமின் குடும்பம் குர்தாஸ்பூர் மாவட்டத்தைச் சேர்ந்தது. அவரது பிறப்பும் அங்கேயே நடந்தது. உலகக் கல்வி கற்கவில்லை. ஆனால் திருக்குர்ஆன் ஓதத் தெரியும். முன்னாள் சதர் சேக் ஃபஸ்ல் ஹக் சாஹிப் மூலமாக பைஅத் செய்தார். குடும்பத்தில் இவரும் இவரது சகோதரியும் மட்டுமே அஹ்மதிகளாக இருந்தனர். சிகாகோவில் கொள்கைப்பரப்புனராக இருக்கின்ற இனாமுல் ஹக் கௌஸர் சாஹிப் இவரது மாமா ஆவார்.

சில காலம் ME -ல் லேபர் அதிகாரியாகவும், மரவேலை செய்யும் பணியையும் செய்துள்ளார். கொயிட்டாவில் ஒரு furniture கடை நடத்தினார். **ஷ**ஹாதத்தின் போது இவரது வயது 80. தாருஸ் ஸிக்ரில் **ஷ**ஹாதத்தின் பானத்தை அருந்தினார்.

ஜுமுஆ நாளில் சதகா கொடுக்கும் வழக்கம் இருந்தது. வீட்டிலிருந்து 11.00 மணிக்கு ஜுமுஆவுக்காக தயாராகியவாறு வெளியேறினார். சம்பவத்தன்று மஸ்ஜிதின் மெயின் ஹாலில் இருந்தார். இவரது உடம்பில் வலது புறம் முழுவதுமாக எரிந்து போன நிலையில் உடல் எடுக்கப்பட்டது. வயிற்றிலும் கடுமையாக காயம் ஏற்பட்டது. அநேகமாக கிரானைட் வெடித்ததில் **ஷ**ஹாதத் ஏற்பட்டிருக்கலாம். ஜமாஅத் அல்லாத இவரது உறவினர்கள் மருத்துவமனையிலிருந்து இவரது உடலை வாங்கிச் சென்றனர். அவர்களே அடக்கமும் செய்து விட்டனர். வீட்டினரின் கூற்றின்படி **ஷ**ஹீது மர்ஹூம் தொழுகையில் பேணுதல் உள்ளவர். சந்தாக்களை முறைப்படி வழங்குபவர். இவரது பொருளாதார நிலை நன்றாக இல்லாத நிலையிலும் தமது தேவைகளிலிருந்து காசை மிச்சப்படுத்தி இன, மத பாகுபாடுமின்றி ஏழைகளுக்கு உதவி செய்து வந்தார். ஜமாஅத்துடன் நல்ல தொடர்பு இருந்தது.

வீட்டினர் கூறுகின்றனர்: பொதுவாக ஜுமுஆ தொழுகைக்கு முதல் ஸஃப்பில் உட்கார்வார். முதுமையின் காரணத்தால் இன்று என்ன கிழமை என்று நினைவு இருக்காது. வீட்டினர் அனைவரும் ஜமாஅத் அல்லாதவர்கள். எனவே இன்று ஜுமுஆ என்று வீட்டினர் யாரும் இவரிடம் கூறமாட்டார்கள். **ஷ**ஹீது மர்ஹூம் வெள்ளிக்கிழமை அன்று வீட்டிற்கு வரும் ஒரு யாசிப்பவரை நினைவில் வைத்திருந்தார். யாசிப்பவரைப் பார்த்தவுடன் இன்று ஜுமுஆ நாள் என்று அவருக்கு நினைவு வந்து விடும். ஒரு ஜுமுஆ நாளில் அந்த யாசிப்பவர் வரவில்லை. மகள், இன்று ஜுமுஆ நாளல்லவா? என்று கூறியதும் உணவு கூட உண்ணாமல் தொழுகைக்காக புறப்பட்டு விட்டார்.

மூத்த மகன் கூறுகிறார்: இரவில் படுக்கையில் காணவில்லை என்றால் பெரும்பாலும் தொழுது கொண்டிருப்பார். எனக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய குடும்பத்தின் மீது பேரன்பு உண்டு. அந்த அன்பு உங்களிடம் இல்லை. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய குடும்பத்தினரை கனவில் தரிசித்துள்ளேன் என்று **ஷ**ஹீது மர்ஹூம் தங்களிடம் கூறியதாக மகன் கூறுகிறார். மகன் மேலும் கூறுகையில், முஹர்ரம் 10 -ம் தேதி நோன்பு வைப்பார். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கொய்ட்டாவுக்கு வந்த சம்பவத்தை அடிக்கடி நினைவு கூர்வார். ஹுஸுர் பார்க் ஹவுஸ் -ல் தங்கியிருந்த போது அந்த இடத்தை இரவும் பகலும் பணி செய்து சீர்படுத்தி இருந்தார். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் வந்த போது சுவர்களிலிருந்து விசுவாசம் பொங்குகிறதே! என்று கேட்டார்கள். இது யாருடைய வேலை என்று கேட்டார்கள். அங்கிருந்த ஒரு நாளில் குழாயிலிருந்து தண்ணீர் ஒழுகிக் கொண்டிருந்தது. அதை யாராலும் சரிய செய்ய முடியவில்லை. முஹம்மது ஹுஸைனைக் கூப்பிடுங்கள். அவர் சரி செய்து தருவார் என்று ஹுஸுர் கூறினார்கள். அவ்வாறே இவர் அதனை சரி செய்ததும், முஹம்மது ஹுஸைன் அதனை சரி செய்வார் என்று நான் சொன்னேனல்லவா? என்று ஹஸ்ரத் இரண்டாவது

கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறினார்கள். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக. இவரது சந்ததியினருக்கு அஹ்மதிய்யத்தாகிய உண்மை இஸ்லாத்தை உணர்ந்து கொள்ளும் தவ்ஃபீக் வழங்குவானாக.

இந்த சம்பவங்கள் எல்லாம் எத்தகையது எனில் இதனை நான் விரிவாகக் கூறத் தொடங்கினால் நீண்டு கொண்டே போய் விடும். எனவே சுருக்கமாகவே கூறியுள்ளேன்.

ஆனால் ஒரு ஷஹீதைப் பற்றி நான் ஏற்கனவே கூறி விட்டேன். ஆனால் அது மிகச் சுருக்கமாக இருந்தது. அவரது மனைவி பிறகு இன்னும் சிறிது விபரங்களை அனுப்பியுள்ளார். எனவே அந்த ஷஹீதைப் பற்றி சுருக்கமாக நான் மீண்டும் கூறுகிறேன்.

**டாக்டர் உமர் அஹ்மத் சாஹிப் ஷஹீது.** இவரது மனைவி கூறுகிறார்: எனக்கும் அவருக்கும் திருமணமாகி ஒன்றரை வருடம்தான் ஆகிறது. இக்காலத்தில் நான் அவரை மிகவும் அன்பு காட்டுகின்றவராகவும், குறைவாக பேசுபவராகவும் இருந்தார். சிறு வயதிலேயே ஷஹாதத் ஆவதற்கு விருப்பம் இருந்தது. ஷஹீது மர்ஹூம் 2 – 3 வது வகுப்பு படிக்கும் போது மேஜர் அஸீஸ்பட்டி என்பவரை பற்றி, உங்களை எனக்கு ரொம்பப் பிடிக்கும் என்று கடிதம் எழுதியுள்ளார். மேஜர் அஸீஸ்பட்டி பாகிஸ்தான் இராணுவத்தில் இருந்தார். அவரும் ஷஹீதுதான் அவரைப் பற்றி ஒரு நூலில் இவர் படித்திருந்தார். தனது தனிப்பட்ட கடிதத்தில் அவரைப்பற்றி எழுதியுள்ளார். எனக்கு உங்களை மிகவும் பிடித்துள்ளது. நானும் உங்களைப் போன்று ஷஹீதாக விரும்புகிறேன். இந்த சுருக்கமான கடிதம், ஷஹீது மர்ஹூமுடைய தாயாரிடம் பாதுகாப்பாக உள்ளது. திருமணம் சம்பந்தமாக இவரிடம் பேசும் போது, சொர்க்கத்திற்கு செல்வதற்கான ஒரே Short cut ஷஹாதத் தான் என்ற முடிவுக்கு வந்துள்ளேன். ஆனால் அந்த பாக்கியம் எனக்கு எங்கே கிடைக்கப் போகிறது? என்று கூறினார். இராணுவத்தில் இவர் இருமுறை முயற்சித்தார். இரு முறையும் கடைசி நிலையில் அது கிடைக்காமல் போய் விட்டது.

ஷஹாதத்தைப் பெறுவதற்கு ராணுவம் தான் சிறந்தவழி எனறு கருதியிருந்தார். அஹ்மதிய்யா ஜமாஅத் நாட்டிற்கு எதிரானது என்று கூறுபவர்களுக்கு இதையே பதிலாக கூறுகிறேன். நாட்டுப்பற்று இவ்வாறு அவர்களிடம் நிரம்பி காணப்பட்டது. பாருங்கள்! எப்போது ஜமாஅத்தில் என்ன பிரச்சனை எழுந்தாலும் இந்த உமர் தான் முதல் வரிசையில் அமர்ந்து நெஞ்சில் குண்டை பெறுவான் என்று எப்போதும் ஷஹீது மர்ஹூம் கூறி வந்ததாக பெரும்பாலார் கூறுகிறார்கள். ஷஹீது மர்ஹூம் எழுதிய கடிதத்தில் மேஜர் அஸீஸ்பட்டியைப் பற்றி எழுதிவிட்டு மேஜர் உமர் ஷஹீது என்று கீழே எழுதியுள்ளார். வீட்டில் இருந்தால் பள்ளிக்கு சென்றுதான் தொழுவார். மக்ரிபுக்கு பள்ளிக்கு சென்றால் இஷாவுக்குப் பிறகு ஏதாவது ஜமாஅத் வேலைகளை செய்துவிட்டுதான் வீடு திரும்புவது இவரது வழக்கமாக இருந்தது. குத்தாமுல் அஹ்மதிய்யாவுக்கு மிகவும் தகுதியானவர். வருடத்தில் ஓரிருமுறை வக்ஃபே ஆர்ஸியில் செல்வார். படைப்பினங்களுக்கு ஆற்றும் சேவையில் மிகவும் ஆர்வமுடையவர். வருடத்தில் இருமுறை இரத்ததானம் செய்வார். தாருஸ் ஸிக்ரில் காயமுற்ற நாளன்று அலுவலகத்திற்கு போவதற்காக வெளியில் வந்து, எனக்கு நேரமாகிறது என்று கூறிக்கொண்டே விரைவாக சென்றார். அலுவலகத்திற்கு அருகில் தாருஸ் ஸிக்ர் உள்ளது. அங்கேயே ஜுமுஆ தொழுது வந்தார். பெரியவர், சிறியவர் அனைவரின் தேவையையும் கருத்தில் கொள்பவராக இருந்தார். அவரது மகளுக்கு 8 மாதங்கள் ஆகிறது. அவளிடம் மிகவும் அன்பு காட்டினார். அலுவலகத்தை விட்டு திரும்பியதும் குழந்தையுடன் நீண்ட நேரம் விளையாடிக் கொண்டிருப்பார். தனது மகள் மீது கவனமின்மையை அனுமதிக்கமாட்டார்.

மனைவி கூறுகிறார்: மகளிடம் மட்டுமல்ல; எல்லா குழந்தைகளிடமும் அதிகமாக அன்பு காட்டக்கூடியவர். குழந்தைகள் பாவமற்றவர்கள் என்பதால் எனக்கு குழந்தைகளைப் பிடிக்கும் என்று கூறுவார். மனைவி எழுதுகிறார்: ஷஹாதத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு நான் ஒரு கனவு கண்டேன். அந்த கனவை உமர் (ஷஹீது) இடம் கூறிய போது அவர் சிரித்துக் கொண்டே சென்று விட்டார்.

மிகவும் தூய்மையை விரும்புபவர்; மென்மையான உள்ளம் கொண்டவர்; எவருக்கும் கஷ்டத்தை தரமாட்டார். பாகிஸ்தானில் கடும் வெயில் என்பது எல்லாருக்கும் தெரியும். மதியம் அலுவலகத்திலிருந்து

திரும்பினால் லேசாக Calling Bell –ஐ அடித்து விட்டு காத்திருப்பார். யாருக்கும் சிரமம் ஏற்படக்கூடாது என்று நினைப்பார். அரசாங்க வேலை பார்த்து வந்தார். இவரது சக பணியாளர்கள் எங்களது அதிகமான அன்பிற்குரிய பையன் எம்மை விட்டு பிரிந்து போய் விட்டான் என்று கூறினர். இரங்கலுக்காக இவரது அலுவலகத்தில் உள்ள எல்லாரும் வந்தனர்.

ஏதாவது பிரச்சனை என்றால் உடனே காலத்தின் கலீஃபாவுக்கு கடிதம் எழுதி விடுவார். என்னிடம் (மனைவி) ஹுஸுருக்கு கடிதம் கண்டிப்பாக எழுதிவிட வேண்டும் என்பார். எனது பெற்றோர், நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களிடம் மிகவும் கண்ணியத்துடன் நடந்து கொள்வார். நண்பர்களுக்காக சிறிது நேரத்தை செலவிடுவார். காலத்தின் கலீஃபாவிடமிருந்து, நோன்பு பிடிக்குமாறோ, துஆவுக்காவோ, தஹஜ்ஜுத் தொழுகைக்காகவோ, ஸதகா கொடுக்குமாரோ கட்டளை வந்தால் உடனே அதனை நிறைவேற்றுவார். சந்தாக்கள் அனைத்தையும் சரியான வருமானத்திற்கு ஏற்ப தந்து விடுவார். 23 மே அன்று வஸிய்யத் சந்தாவிற்கு செலுத்த வேண்டிய 9,500 ரூபாயை செலுத்தினார். வீட்டுக்கு வந்து அல்லாஹ்வுக்கு நன்றி; எனது சந்தா தொகை முழுவதும் பூர்த்தியாகி விட்டது என்று கூறினார். செய்யதுனா பிலால் ஃபண்ட் தொடங்கப்பட்ட நாள் முதல் தொடர்ந்து ஒரு தொகை செலுத்தி வந்தார். வீட்டில் பிறந்த நாள் கொண்டாட்டம், பரிசு வழங்குதல் போன்றவற்றை கண்டால் கடும் அதிருப்தி அடைவார். ஹுஸுர் இதனை தடுக்கவில்லையா? இந்த பைசாவை ஜமாஅத்தில் ஏதாவது ஒரு சந்தாவில் போடுங்கள். அது தான் நல்லது என்று கண்டிப்புடன் கூறுவார் சில நாள்கள் ஆஸ்பத்திரியில் இருந்த பிறகு இவரது ஷஹாதத் நடந்தது.

இந்த ஷஹீதுகளைப் பற்றிய குறிப்புகள் முடிந்து விட்டன. ஷுஹதாக்களைப் பற்றி நான் குறிப்பிட்டேன். இவர்கள் அனைவரும் மிக்க நல்ல பண்புகளில் ஒன்றுபட்டு இருப்பதை காணமுடிகிறது. தொழுகையில் கவனம் இருந்தது. தாம் மட்டுமல்ல; தமது குழந்தைகளையும் வீட்டினரையும் தொழுகைக்காக கவனமூட்டியிருக்கின்றனர். அவர்களுள் ஒருவர் வேலைசெய்யும் இடத்தில் இருந்து தொழுகைநேரத்தில் போன் செய்து வீட்டினரை தொழுமாறு கூறுகிறார். ஒருவர் மஸ்ஜித் அல்லது தொழுகை மையம் தூரமாக இருப்பதால் வீட்டிலேயே ஜமாஅத்துடன் தொழுதுள்ளார். ஏன்? அவர்களுக்கு கவலையிருந்தது. தொழுகைதான் தமக்கும் தமது வீட்டினருக்கும் மறுஉலக வாழ்கையில் நன்மை பயக்கும் என்று கருதியிருந்தனர். எனவே அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறும் வாசல் இபாதத் தான் என்று கருதினர். இவர்கள் அனைவரையும் ஜுமுஆ தொழுகையில் சிறப்பான கவனம் செலுத்துபவர்களாக காண்கிறோம். சில இளைஞர்கள், வேலையின் காரணத்தால் ஜுமுஆவுக்குப் போக முடியாதது போல் தெரிகிறது என்று கூறிவிட்டு பணிக்கு சென்றனர். ஆனால் தொழுகை நேரம் வந்த போது எல்லா உலக வேலைகளையும் அப்படியே போட்டுவிட்டு தொழுகைக்குச் செல்பவர்களாக இருந்தனர்.

இன்னும் பலர் தஹஜ்ஜுத் தொழுபவர்களாக இருந்தனர். சிலர் தஹஜ்ஜுத் மற்றும் நஃபில்களை நிறைவேற்ற முயற்சி செய்பவர்களாக இருந்தனர். இளைஞர்களாக இருந்த ஷுஹதாக்களும் சரி, பெரிய வயதுடைய ஷுஹதாக்களும் சரி. அனைவரிடம், தமக்கு ஷஹாதத் உடைய பதவி கிடைக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர்களாக இருந்திருக்கின்றனர். பிறகு அவர்கள் அனைவரிடமும் மற்ற நல்லொழுக்கங்கள் மிக அதிகமாக காணப்பட்டதையும் காண்கிறோம். இந்த நல்லொழுக்கங்கள் இவர்களின் இல்லற வாழ்விலும் சரி; வீட்டுக்கு வெளியில் உள்ள வாழ்விலும் சரி; ஜமாஅத் பணியாளர்களுடன் சேர்ந்து பணியாற்றும் போதும் சரி. இவர்களின் நல்லொழுக்கங்கள் எல்லா நிலையிலும் வெளிப்பட்டுள்ளன. தமது பணி செய்யும் இடங்களிலும் தம்முடன் பணி செய்பவர்களிடமும் தமது நல்லொழுக்கத்தால் ஈர்த்து இருந்தனர். ஆணின் உயர்ந்த நல்லொழுக்கம் அவரது மனைவியின் சாட்சியத்தில் இருந்து தெரிய வரும்.

சில வேளைகளில் ஆண் வெளியில் நல்லொழுக்கத்தை வெளிக்காட்டுகிறார். ஆனால் வீட்டில் மனைவி மக்களுடன் நல்லொழுக்கம் காட்டுவதில்லை. ஒரு திருமணமான ஆணின் மிகப்பெரிய சாட்சி அவனது மனைவிதான். தமது கணவனின் தொழுகை நல்லொழுக்கம் பற்றி மனைவியின் சாட்சியம் சரியாக இருக்கும் எனில் அந்த மனிதர் அல்லாஹ்வின் மீது பயம் கொண்டவாறு அல்லாஹ்வின் மீதுள்ள கடமையையும் அடியார்களின் கடமையையும் நிறைவேற்றுபவராக இருந்தார் என்பது நிச்சயமாக நிரூபணம் ஆகும். இங்கு இந்த ஷுஹதாக்களின் நல்லொழுக்கம் பற்றி மனைவி மட்டுமல்ல. சமுதாயத்தில் உள்ள

ஒவ்வொரு நபரும் யாரெல்லாம் அவருடன் தொடர்பு வைத்திருந்தார்களோ அவர்கள் அனைவரும் இவர்களது நல்லொழுக்கத்திற்கு சாட்சியாக இருக்கின்றனர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) கூறுகிறார்கள்:**

ஒருவர் அடியார்களின் மீதுள்ள கடமையை சரிவர நிறைவேற்றவில்லை எனில் மனைவி மக்கள், உறவினர்களின் கடமையை சரிவர நிறைவேற்றவில்லையென்றால் இறைவனின் கடமையை நிறைவேற்றியவராகமாட்டார். அவர்கள் வெளிப்படையாக தொழுபவராக இருப்பினும் அடியாருக்கு உரிய கடமையை செய்யாத காரணத்தால் இவரது இபாதத்துகள் வீணாகி விடுகின்றன.

இந்த ஷுஹதாக்கள் ஷஹாதத் என்ற இடத்தை அடைந்திருக்கிறார்கள் எனில் நிச்சயமாக இவர்களின் இபாதத்தை அல்லாஹ் ஏற்றுக்கொண்டுள்ளான் என்பதற்கும் அடியார்களின் கடமையை சரியாக நிறைவேற்றியுள்ளார்கள் என்பதற்குமான சான்றிதழாக அது இருக்கின்றது.

மேலும் நாம் பார்க்கின்றோம். இந்த இபாதத்துகளை மட்டும் நிறைவேற்றியதோடு நின்றுவிடவில்லை. மாறாக, தமது பொறுப்புகளையும் முழுமையாக நிறைவேற்றினார்கள். ஒரு தந்தை தமது வீட்டின் கண்காணிப்பாளர் ஆவார். அவரது வீட்டின் தர்பிய்யத்திற்கு அவர் பொறுப்பாளி. இந்த கடமையை நிறைவேற்றுவதன் பக்கம் இவர்கள் கவனம் செலுத்தியுள்ளார்கள். இந்த கவனம் எல்லா ஷஹீதுகளிடம் சமமாக காணப்பட்டதை பார்க்கிறோம். அவர்கள், நீங்கள் வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளை கொலை செய்யாதீர்கள் . (17:32). என்ற திருக்குர்ஆன் வசனத்தை அவர்கள் கவனத்தில் வைத்திருந்தனர். குழந்தைகளின் தர்பிய்யத்தும் நமது பொறுப்புதான் என்ற உணர்வுகூட இல்லாமல் உங்கள் தொழில்களில் மூழ்கிவிட வேண்டாம். அவர்கள் மார்க்கத்திற்கு உலகைவிட முக்கியத்துவம் தருவோம் என்ற உடன்படிக்கையை மறக்கவில்லை. அதனை நிறைவேற்றுவதற்காகத் தான் வேலையிலிருந்தாலும் வீட்டுக்குபோன் செய்து குழந்தைகளை தொழ ஏவுமாறு நினைவுபடுத்தினர். மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவது தொழுகையில் இருந்துதான் தொடங்குகிறது. ஒரு குழந்தை தனது தந்தையின் தர்பிய்யத் நடைமுறைப் பற்றி கூறும்போது, நீண்ட பயணங்களுக்கு எங்கள் அப்பா எங்களை அழைத்துச் செல்லும் வழியில் துஆ செய்து கொண்டே வருவார். உரத்த குரலில் மீண்டும் மீண்டும் ஓதுவார். அந்த துஆ எங்களுக்கு மனனம் ஆவதற்காக அவ்வாறு செய்தார்கள். எங்களுக்கு அவை நினைவில் நின்று விட்டன. எங்களுக்கு நினைவில் நின்றது மட்டுமின்றி எந்த இடத்தில் எந்த துஆ ஓத வேண்டும் என்று தெரிந்துவிட்டது. இதுவே உயிர்த்தியாகிகளின் தர்பிய்யத் செயல்முறை ஆகும். சில இளைஞர்கள் அவர்களின் பெற்றோர்கூட அல்லாஹ்வின் அருளால் உயிருடன் உள்ளனர். இந்த இளைய ஷஹீதுகள் தான் தமது பெற்றோருக்கு எப்போதும் சேவை செய்து வந்திருக்கின்றனர். பெற்றோர் நோயுற்றபோது இரவும் பகலையும் ஒன்றாக்கி (பணிசெய்து) இருந்தனர். பெற்றோருடன் நல்ல முறையில் நடந்துகொள்ளுமாறு திருக்குர்ஆன் கட்டளையிட்டுள்ளது. மேலும் அவர்களை சீ என்று கூட சொல்லக்கூடாது. இம்மக்கள் இக்கடமையை செய்திருக்கின்றனர். சில வேளை திருமணமான இளைஞர்கள் பெற்றோரின் கடமையை செய்துவிட்டு மனைவியின் கடமையை மறந்து விடுகின்றனர். மனைவியின் கடமையை செய்வதில் கவனம் இருந்தால் பெற்றோரின் கடமையை மறந்துவிடுகின்றனர். ஆனால், இந்த முஃமின்கள் எந்த கடமையையும் மறக்காது நிறைவேற்றியிருந்தனர். மனைவிமார்கள், பெற்றோர்களின் கடமையுடன் எமது கடமையையும் நிறைவேற்றியிருந்தனர். எமது உரிமையை இவர் பறித்துவிட்டார் என்ற எண்ணம் கூட ஏன் உணர்வு ரீதியான கஷ்டம் கூட தந்ததில்லை என்கின்றனர். பெற்றோர் குறிப்பிடும்போது, எமது கடமையை நிறைவேற்றும் வேளையில் மனைவியின் கடமையை நிறைவேற்றுவதில் குறைவு வைத்துவிடக்கூடாதே என நாங்கள் நினைத்தோம் என்று கூறுகின்றனர்.

இந்த பரஸ்பர நம்பிக்கைதான் அடியார்களின் கடமையை சரிவர நிறைவேற்றுதல் ஆகும். ஓர் அழகிய சமுதாயத்தை உருவாக்கி உலகிலேயே சொர்க்கத்தைப் போன்ற வீட்டை ஆக்கிக்காட்டினர். இந்தப் பணிகளுக்கு இறைவன் எவ்வளவு பெரிய கூலியை தந்தான். நிரந்தர ஜன்னத்திற்கு உறுதி வழங்கிவிட்டான்.

17-18வயது இளைஞர்களான ஷஹீதுகளின் இயல்புபற்றி அவரது பெற்றோர்கள், நண்பர்கள், கல்லூரியில் கூட படிப்பவர்களின் கருத்தின் படி இந்த இளைஞர்களை தனித்தன்மை வாய்ந்தவர்கள்.

தனிப்பட்ட இயல்புகொண்ட பையனாக இருந்தான் என்று குறிப்பிடுகிறார்கள். அவர்களில் இன்னொரு பண்பு அனைத்து ஷஹீதுகளிடம் சமமாக காணப்பட்டன. அந்த சிறப்பு பண்பாவது. ஒப்பற்ற மார்க்க ரோஷம், ஜமாத்துக்கு கட்டுபடுதலில் இணையற்ற நிலை. ஜமாத்துக்காக நேரத்தை தியாகம் செய்ய எப்போதும் தயாராக இருத்தல், மார்க்கத்துக்கு உலகைவிட முன்னுரிமை வழங்கி ஜமாஅத்துக்காக எல்லா கடமைகளையும் நிறைவேற்றிய பிறகும் கூட ஜமாஅத்துக்காக நேரத்தை ஒதுக்குதல், இது எப்போதாவது ஏற்படுகிற அவசரசூழ்நிலை மட்டுமல்ல, சாதாரண நிலையிலும் கூட பலப்பல மணிநேரங்கள் ஜமாஅத்துக்காக நேரம் ஒதுக்குவது இன்னும் சில வேளையில் தமது உண்ணலையும், குடித்தலையும் மறந்து பணியில் மூழ்கியிருப்பது மற்றும் கிலாஃபத்துடன் அசாதரண தொடர்பு, அன்பு, கட்டுப்படுதலை வெளிப்படுத்துதல் அனைத்தும் காணப்பட்டன. இவற்றை எல்லாம் ஏன் செய்தனர்?

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குப் பிறகு ஒரு நிரந்தர கிலாஃபத் தொடரவிருந்தது. அதில் முஃமின்களின் விசுவாச உணர்வு கட்டுப்படுதல் கிலாஃபத்திற்காக துஆ செய்தல் இதன் மூலமாகவே அது நிலைபெறவிருந்தது என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியிருந்தார்கள்.

எனவே இம்மக்கள் தான் இபாதத் மற்றும் அமலே சாலிஹா மூலம் கிலாஃபத்தை நிரந்தரமாக வைப்பதற்கு கடைசி நிமிடம் வரை முயன்றனர். இதனை சாதாரணமாக அன்றி உயர் தரமான முறையில் செய்தனர். கிலாஃபத்தை தத்தமது வட்டத்தில் உறுதிப்படுத்தினர். இவர்கள் கிலாஃபத்தை பொருத்தமட்டில் வலிமைமிக்க உதவியாளராக இருந்தனர். இப்படிப்பட்ட மக்களை எனக்கு வழங்குவாயாக என்று தான் காலத்தின் கலீஃபா துஆ கேட்டுக் கொண்டிருக்கிறார். அல்லாஹ் இந்த எல்லாரின் தகுதியையும் உயர்த்துவானாக. தனது அன்பு, நேசத்தின் நெருக்கத்தை இவர்களுக்கு வழங்குவானாக. இந்த ஷஹீதுகள் தமது ஸ்தானத்தை அடைந்து விட்டனர். ஆனால் நம்மை இந்த குர்பானியின் மூலம் கவனமூட்டி விட்டு சென்றுள்ளனர்.

எனது அன்பிற்குரியவர்களே! உறவினர்களே! எனது சகோதரர்களே! எனது மகன்களே! குழந்தைகளே! எனது தாய்மார்களே! சகோதரிகளே! எனது மகள்களே! நாங்கள் சஹாபாக்களின் முன்மாதிரியின்படி நடந்து எமது பைஅத் உடன்படிக்கையை நிறைவேற்றி விட்டோம். ஆனால் செல்லும் போது உங்களிடம் எமது கடைசி விருப்பத்தை சொல்லிக் கொள்கிறோம். இந்த நன்மைகள் விசுவாசத்தின் முன்மாதிரியை நீங்கள் நிலைநாட்ட வேண்டும். சில ஆண்களும் சில பெண்களும் எனக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். தாங்கள் இன்று ஷுஹதாக்களைப் பற்றி பேசுகிறீர்கள். அவர்களின் சம்பவங்களைக் கேட்டு எங்களுக்கு பொறாமையே ஏற்படுகிறது. எத்தகைய நல்ல மக்களாக விசுவாசமிக்கவர்களாக இம்மக்கள் இருந்துள்ளனர். எங்களுக்கு வெட்கமாகவும் இருக்கிறது. இந்த தகுதியை நாம் அடையவில்லையே என்று தோன்றுகிறது. இந்த சம்பவங்களை கேட்டு எங்கள் கவலை மென்மேலும் அதிகமாகி விட்டது. எத்தகைய வைரங்கள் எம்மை விட்டு பிரிந்து போய் விட்டன. இந்த உணர்வு சிந்தனை மிகவும் நல்லது தான். ஆனால் முன்னேறும் சமுதாயங்கள் வெறுமனே உணர்வு ஏற்படுவது மட்டும் போதும் என்று எண்ணுவதில்லை. மாறாக, இந்த நன்மைகளை தொடர்வதற்கு பின்னால் இருக்கின்ற ஒவ்வொருவரும் சென்றுபோனவர்களின் விருப்பங்களையும் இலக்குகளை நிறைவேற்ற முயற்சியும் செய்கிறார். எனவே நமது பணியும் கடமையும், இந்த தியாகத்தின் ஹக்கை நம்மிடம் தூய மாற்றம் ஏற்படுத்தியவாறு நிறைவேற்ற வேண்டும். மனைவி மக்களின் கடமையையும் நிறைவேற்றும் பொறுப்பபை சரியாக செய்யுங்கள். ஜமாஅத் அமைப்பு உங்கள் சிறிய குழந்தைகளின் தர்பிய்யத்தை கடமையை செய்யும் போது ஒவ்வொரு ஜமாஅத்தின் தனி நபரும் அவர்களுக்காக துஆவும் செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களின் உறவினர்கள் அனைவரும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. அவர்களின் துன்பங்கள் எல்லாவற்றிற்கும் அவனே இவர்கள் சார்பாக தற்காப்பு செய்வானாக. மனிதனின் முயற்சி எவ்வளவுதான் இருந்தாலும் அதில் குறைவு ஏற்பட்டு விடுகிறது. அல்லாஹ்வே சரியான நிம்மதிக்கான ஏற்பாட்டை செய்கிறான். அல்லாஹ் இவர்களின் ஆறுதலுக்கும் நிம்மதிக்கும் ஏற்பாடு செய்வானாக. அவர்களின் நிலைமையை சீர்திருத்த ஏற்பாடு செய்யவானாக.

இந்த ஷுஹதாக்களின் உறவினர்களுக்காகவும், ஜமாஅத் அன்பர்கள் தமது பாதுகாப்பிற்காகவும் துஆ செய்யுங்கள். விஷமிகளின் எல்லா தீங்கிலிருந்தும் அல்லாஹ் பாதுகாப்பானாக. ஏனெனில் இப்போது

துஆக்கான தேவை அதிகமாக உள்ளது. பாகிஸ்தானின் நிலைமை மிகவும் மோசமாகிக் கொண்டிருக்கிறது. அதில் எந்த மாறுதலும் ஏற்படவில்லை. எதிர்ப்பு கூடிக் கொண்டுதான் இருக்கிறது. அல்லாஹ் எல்லா தீங்கிலிருந்தும் பாதுகாப்பானாக. இந்த எதிரிகளின் தீங்கை அவர்கள் பக்கமே திருப்புவானாக. நமது பாதங்களை இன்னும் உறுதிப்படுத்துவனாக. இறுதியில் ஜுமுஆவுக்கு பிறகு ஒரு ஜனாஸா காயிப் தொழுவேன் என்பதை அறிவிக்கிறேன்.

நஸீர் ஷஃபீகுல் முராதனி சாஹிப். சிரியாவின் முன்னாள் அமீர். 30 ஜுன் 2010 அன்று தமது 67வது வயதில் வஃபாத் ஆகி உள்ளார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். F.A படித்த பிறகு 6 வருடங்கள் வரை ஷேக் ஹாஷிம் என்பவரிடம் இஸ்லாமிய ஷரீஅத்தைப்படித்தார். அவரது வீடு திமிஷ்கில் ஷாவூர் மஹல்லாவில் உள்ளது. சிரியாவின் அமீர் முனீருல் ஹஸ்மி சாஹிப் அங்கு தான் இருந்தார். சிறு வயதிலேயே அவருக்கு இவரைத் தெரியும். அக்காலத்திலேயே அவருக்கு பணி செய்யும் வாய்ப்பு கிடைத்தது. நஸீர் சாஹிப் 1963 -ல் ஜமாஅத்தின் சில கொள்கைகளைக் கேட்டு பைஅத் செய்து விட்டார். அவர் திமிஷ்கில் Urban transport -ன் இன்சார்ஜ் ஆக இருந்தார். இவரை 1986 -ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் முனீருல் ஷஸ்மி வஃபாத் ஆன பிறகு ஷாம் நகரத்தின் அமீராக நியமித்தார்கள். 1999 -ல் சிரியாவின் சாதகமில்லா சூழ்நிலையால் அங்குள்ள இமாரத் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இந்நிலையில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் சிரியா ஜமாஅத்திடம் நீங்கள் எழுத்தாளர்களாக ஆகுங்கள் என்றார்கள். இவர் நூல்கள் எழுதினார். இவரது ஏழு நூற்கள் அச்சிடப்பட்டு விட்டன. வஃபாத்திற்கு முன்னரும் கூட அவர் ஒரு நூல் எழுதினார். 1996 -ல் இங்கிலாந்து ஜல்ஸா சாலானாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. அதற்குப் பிறகு வாழ்நாள் முழுவதும் காலத்தின் கலீஃபாவின் விருந்தோம்பலை குறிப்பிட்டு கூறுபவராக இருந்தார். மிகவும் எளியவர். ஆனால் நகைச்சுவை உணர்வுள்ளவர். ஜமாஅத்திற்காக தம்மை அர்ப்பணித்தவர்களுக்கு மிகவும் கண்ணியம் செய்பவர்.

நமது ஜமாஅத்தில் தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்கள் அங்கு சிரியாவுக்கு (மேற்படிப்பிற்கு) திமிஷ்கிக்கு வருகிற போது ஒவ்வொருவரையும் நன்கு கவனித்துக் கொள்வார். கிலாஃபத்துடன் பேரன்பு கொண்டவர். கிலாஃபத்தின் பேச்சு வரும் போது அவரது கண்களும், குரலும் தழும்பி விடும். பொறுமையாளராக இருந்தார். திக்ர், ஹம்தால் நிறைந்த உள்ளம் கொண்டவர். விசுவாசமுள்ள நண்பர். மாமானார் வீட்டில் உள்ளவர்களை நன்றாக கவனித்துக் கொண்டார். மனைவியின் தங்கை இவரை தனது தந்தையாக பாவித்தார். இப்போது சிரியாவின் அமீராக நியமிக்கப்பட்டவராக இருப்பவர் கூறுகிறார். நான் ஷாம் -க்கு தேசிய சதர் ஆகி நியமிக்கப்பட்டுள்ளேன். இவர் மிகவும் எளிமையும், கட்டுப்படுதலையும் கண்டு மிகவும் வியந்து போய் உள்ளேன். அல்லாஹ் இவரது தகுதியை உயர்த்துவானாக! இவரது உறவினர்களுக்கு பொறுமையை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 09.07.2010

Translated by : Muallim M. NIZAMUDEEN
Reviewed by : Moulvi S. ABDUL QADIR
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456